[1987 ஏப்ரல் 11

(ஆ) பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு.

திரு. ஆ. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டிற்கான பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள் குழுவின் இரண்டாவது அறிக்கையை (எட்டாவது சட்டமன்றப் பேரவை) குழுத் தலைவரின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

(முற்பகல் 11-30)

(இ) மதிப்பீட்டுக் குழு.

THIRU K. KUPPUSWAMI: Mr. Speaker Sir, I present the following Reports of the Estimates Committee:

Sixth Report on Co-operative Sugar Mills;

Seventh Report on the action taken by the Government on the recommendations contained in its report on Animal Husbandry;

Eighth Report on the action taken by the Government on the recommendations contained in its Report on Handlooms and Textiles Department.

As the Reports could not be printed for want of time, five copies of the above Reports are being kept In Legislature Library for reference of the Members. Printed copies of the Reports will be sent to the Members separately.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

5. வரவு-செலவுத் திட்டம், 1987-88, வாக்கெடுப்பு—(தொடர்ச்சி) கோரிக்கை எண் 23—கூட்டுறவு.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 37,73,50,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பொத்தக்காலன்விளை, அன்பின் நகரம், அடைக்கலா புரம், கடாட்சபுரம், முதலூர், சுப்பிரமணியபுரம், மூக்க கிருஷ்ணாபுரம் ஆகிய கிராமங்களில் பெண்கள் பாய்முடைவோர் கூட்டுறவு சங்கம் அமைக்க வேண்டிய அவசியம் குறித்து